பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 117 பிரமோதூத பங்குனி 10 (24-03-1991) ஞாயிறு

## ● அமைச்சர் ரஞ்சன் மறைவுக்கு மூடப்படாத நிறுவனங்கள் மீது அரசு நடவடிக்கை

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவின் மறைவுக்கு மூடப்படாத நிறுவனங்கள், தேயிலைத் தோட்டங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. தோட்டத் தொழிற்துறை அமைச்சராக விருந்த — 04 ஆம் பக்கம் பார்க்க

## வேலையில் சேர்ந்த தோட்டப் பாடசாலை ஆசிரியர் சில நாட்களால் நகரப்புறம் சென்று விடுகின்றனர்

தோட்டப்பாடசாலைகளில் பணிபுரியவென சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களில் பலர் பதவியேற்று சில நாட்களால் நகரப்பாடசாலைகளுக்கு செல்வாக்கைப் பாவித்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் இந்த நடவடிக்கையால் தோட்டப்பாடசாலை மாணவரின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் கல்வியமைச்சுக்கு புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இவர்களின் இடமாற்றங்களை ரத்து செய்து மீண்டும் பழைய தோட்டப்பாடசாலைகளுக்கே மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக மத்தியமாகாண கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஆரம்பத்தில் தாம் கஷ்டப்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் பணிபுரிவதாக வாக்குறுதியளித்து — 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழீழ மீட்புநிதி

தமிழீழமீட்பு நிதி செலுத்த ஒப்புதலளித்த நல்லூர் உ.அ. அதிபர் பிரிவைச் சேர்ந்தோர் பங்களிப்புச் செய்வதற்கு வசதியாக நாளை பி.ப. 2மணி தொடக்கம் மாலை 4மணிவரை மீட்பு நிதி பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மீட்பு நிதி செலுத்த விரும்புவோர் யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## யாழ் பல்கலைக்கழக உதவி மானிய ஆணைக்குழு இணக்கம்

யாழ் பல்கலைக்கழகத்திற்கான தடைப்பட்டிருந்த பல அத்தியாவசிய உதவிகளையும், அவசிய மான பொருள்களையும் மீண்டும் வழங்குவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும், உயர்கல்வி அமைச்சு வட்டாரங்களும் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ் பல்கலைக்கழக உயர் அதிகாரிகள் குழு கொடுத்த நெருக்குதலை அடுத்தே இவ் உதவிகளை வழங்க முன்வந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. தொடர்ந்து இவ் உதவிகளை வழங்குவதற்கு மறுக்கப்பட்டால் யாழ் பல்கலைக்கழகத்தை மூட — 04 ஆம் பக்கம் பார்க்க

# சிலாவத்துறைக்கு நேற்று கொப்பேகடுவ திடீர் விஜயம்

## 23 படையினர் பலி, 56 பேர் படுகாயம்

கடந்த நான்கு தினங்களாக விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சமர் நடைபெற்று வரும் மன்னார் சிலாவத்துறைப்பகுதிக்கு வடபகுதிக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ நேற்று விஜயம் செய்தார்.

இதேவேளை சிலாவத்துறை முகாமுக்கு மேலதிகமாக துருப்புகள் கடல் மார்க்கமாக அனுப்பப்பட்டதாகவும், நேற்று முன்தினமிரவு முதல் அப்பகுதியில் அமைதி நிலவுவதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

சிலாவத்துறை மோதலில் படையினர் தரப்பில் 23 சிப்பாய்கள் பலியானதாகவும் 56 சிப்பாய்கள் மோசமான காயங்களுக்குள்ளானதாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## ஆனையிறவு இராணுவம் மீது புலிகள் அருள் 89 தாக்கு

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் காலை 8 மணிமுதல் 10மணிவரை பரந்தனை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் ஷெல் தாக்குதலையும் நடாத்தினர்.

இதன்பின்பு விடுதலைப் புலிகள் அருள் 89 தாக்குதலை நடாத்தினர். சேதவிவரம் தெரியவில்லை.

பின்பு காலை 11.30 மணியளவில் உல்லாச விடுதியில் இருந்து உப்பளம் நோக்கி இராணுவத்தினர் செல்கையில் விடுதலைப்புலிகள் துப்பாக்கி பிரயோகம் செய்தனர் இதன்போது இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதவிவரம் தெரியவில்லை. (71)

## மே 19ஆம்திகதி இந்திய தேர்தல்

மே மாதம்18-ம் திகதி அல்லது 19 ம் திகதியளவில் இந்திய பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெறவுள்ளது என இந்தியத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## தென் தமிழீழத்தில் பொதுமக்கள் ராணுவம்-ரெலோவினால் கைது

தென்தமிழீழத்தில் கடந்த சில தினங்களில் 25 அப்பாவி மக்களை இராணுவத்தினரும், ரெலோ இயக்கத்தினரும் இணைந்து கைது செய்துள்ளனர்.

மகிழூரில் 14 ஆண்களை கைது செய்து களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர்.

கோவில் போரை தீவைச் சுற்றிவளைத்து பதுங்கியிருந்த இராணுவத்தினர் வயலிற்கு சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் காயமடைந்தார். — 4 ஆம் பக்கம் பார்க்க

## செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர் தேர்தல் இன்று தெரிவு?

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப்பிரிவின் பொதுக் கூட்டம் இன்று யாழ் பரியோவான் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் நடைபெறும் தீர்வாகிகள் தெரிவில் தலைவர் பதவிக்கு போட்டியிடுபவர்களில் ஒருவர் விலகிக்கொள்வதாக ஏற்கனவே தகவல் வெளியாகியிருந்தது.

இதேபோல செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர் பதவிகளுக்கு போட்டியிடுபவர்களும் இன்று நடை

## மாவீரர் புகழுடல்களுக்கு சுன்னாக மக்கள் அஞ்சலி

மன்னார் இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த மேலும் எட்டு மாவீரர்களின் புகழுடல்கள் நேற்று சுன்னாகத்தில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

சோக இசையும் ஒலி பெருக்கிகள் மூலம் இசைக்கப்பட்டன.

மாலையில் கோப்பாய் மாவீரர் மயானத்தில் மாவீரர்களின் உடல்கள் தீயுடன்

## வெளிநாட்டு ஏஜன்ஸிகளுக்கு பணம் தருமாறு பயமுறுத்தல்

வடபகுதியில் இருந்து வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பி வைத்த ஏஜன்ஸிகள் தற்போது கொழும்பில் செயற்பட்டு வந்தன.

ஆனால் அங்கு இவர்களுக்கு 'பணம் தருமாறு' விடுக்கப்பட்ட பயமுறுத்தல்களால் அவர்கள் தமது தொழில்களைக் கைவிட்டு மீண்டும் வடக்கே வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (33)

## தமிழ், முஸ்லிம் ஆசிரியர் இராணுவத்தால் சோதனை

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற பயிலுநர் ஆசிரியர் விசேட செயலமர்வில் கலந்து கொண்ட தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களுக்கு போதிய தங்குமிட வசதிகள் செய்யப்படவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் தங்கவைக்கப்பட்ட இடங்களில் மலசலகூட

## மத்திய வங்கி ஆளுநர்

மாவீரர்களின் புகழுடல்கள் நேற்று சுன்னாகத்தில் பொது மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பெருந் திரளான மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வந்திருந்தனர்.

சுன்னாகம் பகுதியிலும் குடா நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தோரணங்கள் வாழைமரங்கள் கட்டி

மாலையில் கோப்பாய் மாவீரர் மயானத்தில் மாவீரர்களின் உடல்கள் தீயுடன் சங்கமமாகின.

மற்றும் செயற்குழு உறுப்பினர் பதவிகளுக்கு போட்டியிடுபவர்களும் இன்று நடை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு பயணிகள் வவுனியாவில் தவம்

வவுனியாப் பகுதியில் யாழ் வருவதற்காக பெருமளவு மக்கள் காத்திருப்பதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரு தொகையான மக்களே யாழ் வருவதற்கு அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு அரசியல் கட்சிகள் முஸ்தீபு

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் சில அரசியல் கட்சிகள் கூட்டாகப் போட்டியிட நடவடிக்கை எடுத்து வருகின்றன.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, புளொட், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவை கூட்டாக போட்டியிட முடிவு செய்துள்ளன.

இவற்றுடன் மூன்று கட்சி கூட்டணியில் லிபரல் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றை இணைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எதிர்க்கட்சிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி. மக்கள் ஐக்கிய முன்னணி போன்றவை ஒரே அணியில் போட்

— 4ஆம் பக்கம் பார்க்க

## ஆயுதங்களை கைவிடுமாறு பிரேமதாஸ மீண்டும் அழைப்பு

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கைவிட்டு தேர்தலில் பங்குபற்ற முன்வருமாறு ஜனாதிபதி பிரேமதாஸ மீண்டும் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

கண்டி போகம்பர மைதானத்தை திறந்து வைத்துப் பேசிய ஜனாதிபதி விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்கு வர இன்னமும் எமது கதவு திறந்தேயுள்ளது ஆனால் அவர்கள் ஆயுதங்களை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மத்திய வங்கி ஆளுநர் கணக்காளர் நாயகம் முறுகல்நிலை

''மத்திய வங்கியின் கணக்குகளிலும், செயற்பாடுகளிலும் உள்ள குறைகளை நான் சுட்டிக்காட்டிய போது மத்திய வங்கி ஆளுனர் அவற்றிற்குப் பதிலளிப்பதைவிட்டு என்னைப் பகிரங்கமாக விமர்சித்துள்ளார்.''

இவ்வாறு கணக்காளர் நாயகம் கூறியுள்ளார்.

''அரசாங்க தாபனங்களில் நிலவும் குறைபாடுகளையும் ஊழல்களையும் சுட்டிக்காட்டுவதும் எனது திணைக்களத்தின் கடமையாகும். அதனை பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரு

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கப்பல் மூலம் செல்பவர்கள் தமது அலுவல்களிலே கவனம்

அரசாங்க மற்றும் பொது தாபனங்களில் இருந்து கப்பல் மூலம் கொழும்பு செல்பவர்கள் அரசாங்க அலுவல்களை விடுத்து தமது சொந்த தேவைகளையே கொழும்பில் அதிகம் கவனிப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு சென்ற சிலர் செல்வாக்கைப்பயன்படுத்தி பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கொழும்பில்

— 4 ஆம் பக்கம் பார்க்க

இவர்கள் தங்கவைக்கப்பட்ட இடங்களில் மலசலகூட வசதியோ, குடிநீர் வசதிகளோ இருக்கவில்லை.

இதனால் அவர்கள் வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

அத்துடன் அவர்கள் பஸ்களில் செயலமர்வில் கலந்து கொள்ளச்சென்ற போது மக்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## நாட்டின் சில பகுதி கடல் அரிப்பால் இழப்பு

கடல் அரிப்பால் நாட்டின் சில பகுதிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது. கற்பிட்டி முதல் யால தேசிய பூங்கா வரையுள்ள 685 கிலோ மீற்றர் நீளமுள்ள கடற் கரையில் ஆண்டு தோறும் 175,000 முதல் 285,000 சதுர மீற்றர் நிலத்தை இலங்கை இழந்து வருகிறது.

யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவுப் பகுதிகளும் இவ்வாறு பாதிக்கப்படுகின்றன. (38)

## பாரதரத்னா விருது பெற மொரார்ஜி தேசாய் மறுப்பு

நேற்று இந்திய ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பிரபல சங்கீத வித்துவான் டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவுக்கு பத்மவிபூஷண் விருது கிடைத்தது கிரிக்கெட் வீரர் கபில் தேவுக்கும் இந்தியாவின் முதல் கிரிக்கெட் கப்டன் லாலா அமரநாத் ஆகியோருக்கும் பத்ம பூஷண் விருது

— 4 ஆம் பக்கம் பார்க்க

# தென்பகுதியில் மனித உரிமைமீறல் வழக்குகளில்

# ஆஜராகும் சட்டத்தரணிகளுக்கு பயமுறுத்தல்!

தென்பகுதிகளில் மனித உரிமை மீறல் வழக்குகளில் ஆஜராகி வரும் சட்டத்தரணிகள் இனந்தெரியா தோரின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது கொழும்பில் மனித உரிமை சம்பந்தப்பட்ட வழக்குகளில் வாதாடிவரும் சட்டத்தரணி விக்கிரமரட்ணவுக்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இவ்வாறான வழக்குகளில் ஆஜராகி வாதாடி வந்த மூன்று சட்டத்தரணிகள் அங்கு கொல்லப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் டெஸ்மன்ட் பர்னாந்து இதுகுறித்து தெரிவிக்கையில் 'மனித உரிமை மீறல் வழக்குகளில் வாதாடிய பல சட்டத்தரணிகள் ஏற்கனவே கொலை செய்யப்பட்டுள்ளனர். இது சம்பந்தமான பொலிஸாரின் விசாரணைகள் எதுவும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக்கூடியவையாக அமையவில்லை'.

'நாங்கள் கொல்லப்படின் எங்களைக் கொன்றவர்களை பொலிஸ் விசாரணைகள் எவையும் அம்பலப் படுத்தமாட்டா. எனினும் நாங்கள் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்தும் வாதாடுவோம்' எனக் கூறியுள்ளார்.

## உதைப்பந்தாட்டச் சங்க புனரமைப்பு

யாழ்உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தைப் புனரமைப்பதற்கு விரிவான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படுதாகச் செயலாளர் திரு. அ. தேவராசா தெரிவித்துள்ளார்.

இந்த வகையில், நிர்வாக சபையுடன் இணைந்து தொடர்ந்து செயற்படுவது பற்றிய தங்கள் நிலையை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் தமக்குத் தெரிவிக்குமாறு தொடர்பில் தேக்க நிலை கொண்டுள்ள இல உறுப்பினர்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (16)

## சுன்னாகம் ஐயனார் மகோற்சவம்

சுன்னாகம் ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த உற்சவம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும் உற்சவங்களின் சிறப்பு நிகழ்ச்சியாக தினசரி மாலை 6.00 மணி முதல் 7.00 மணிவரை அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜின் சமயச்சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தேர் உற்சவம் 28 ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

## பளையில் முதலாண்டு தினம்

பளை மகா வித்தியாலய ஜனாதிபதி சாரணன் ந. நற்குணத்தின் முதலாண்டு நினைவுதினம் ஏப்ரல் 11 இல் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இச்சாரணர் 09 4 90 இல் சமாதானச் செய்தி எடுத்து சயிக்கிளில் பளை மகா வித்தியாலய சாரணர் குழுவினருடன் கொழும்பு செல்லும் போது விபத்தில் லொறி விபத்தில் சிக்குண்டு மரணமானார்.

## அங்கீகாரம்

ஓய்வூதிய சலுகைத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற விண்ணப்பித்திருந்த யாழ்சுகாதாரத் திணைக்கள ஊழியர்களின் மேலும் ஒரு தொகையினருக்கு ஓய்வு பெறுவதற்கான அங்கீகாரக் கடிதம் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சினால் யாழ்பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இவ்வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 120 ஊழியர்

## நிவாரணப்பணிகளுக்கு கனடா ஒரு கோடி ரூபா நிதி உதவி

இலங்கையில் நிவாரண நடவடிக்கைகளுக்கென கனடா அரசு ஒருகோடியே37 லட்சம்ரூபாவைவழங்கியுள்ளது

நிவசரண அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மூன்று தொண்டர் நிறுவனங்களின் மூலம் இப்பணம் நிவாரணப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது.

## வர்த்தக பாட கருத்தரங்கு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பில் வர்த்தக பாடம் கற்பிக்கும் யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக வர்த்தகக் கல்வி அதிகாரி சி.சிவராசா அறிவித்துள்ளார்.

26 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சாவகச்சேரி கோட்ட ஆசிரியர்களுக்கும், 27 ஆம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் பருத்தித்துறை கோட்ட ஆசிரியர்களுக்கும், 28 ஆம் திகதி யாழ் இந்துவில் வேலணை, பண்டத்தரிப்பு, மருதனாமடம், யாழ்கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. (74)

## கமலாசனி வெற்றி பெற்றது

சரசாலை வீரமாகாளி அம்மன் ஆலய கூட்டுப்பிரார்த்தனைச் சபையினரால் ஆண்மையில் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான பொது அறிவுப் போட்டியில் மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் வெற்றியீட்டியுள்ளது.

மேற்படி போட்டிக்குத் திருமதி தேவரத்தினம் அருள்மொழித்தேவன் பிரதம நடு

## பாடசாலைகளில் அன்னை பூபதி நினைவுநாள்

தியாகி அன்னை பூபதியின் நினைவுநாளை ஏப்ரல் மாதம் 18 ந் திகதி எல்லாப் பாடசாலைகளிலும் கொண்டாடுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (ப-5)

## ஆசிரியர் விவரம் சேகரிப்பு

தற்போது பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் பற்றிய விவரங்களையும், பதவியை விட்டு விலகியவர்கள் பற்றிய விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு வடகிழக்குமாகாணக்கல்விஅமைச்சுபிராந்திய பணிப்பாளர்களைக் கேட்டுள்ளது.

வேலையில் நின்றும்தாமாக விலகியவர்கள், இராஜினாமாச் செய்தவர்கள், பதவியில் நின்றும் நீக்கப்பட்டவர்கள் இறந்தவர்கள், ஓய்வு பெற்றவர்கள் என்ற ரீதியில் ஆசிரியர்களைத்தரம்பிரித்து மொத்தமாக உள்ள ஆசிரியர்களின் தொகையை அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (78)

## ஹாட்லி மலருக்கு விடயங்கள் தேவை

## புதிய முதலாம், இரண்டாம்தர அதிபர்கட்கு கொழும்பில் முகாமைத்துவக்கருத்தரங்கு

கடந்த வருடம் அரசாங்க பாடசாலைகளில் முதலாம், இரண்டாம் அதிபர்களாக நியமனம் செய்யப்பட்ட சகல அதிபர்களுக்குமான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 30-ம் 31-ம் திகதிகளில் கொழும்பில்நடைபெறவுள்ளன.

தொழில்சார் முகாமைத்துவம் பற்றியதாக இக்கருத்தரங்கு அமைந்திருக்கும்

தமிழ், முஸ்லிம் அதிபர்களுக்கான கருத்தரங்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும், சிங்கள அதிபர்களுக்கான கருத்தரங்கு டி. எஸ். சேனநாயக்கா கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

## மேற்கு இந்தியத் தீவுகள் அணியை அவுஸ்திரேலியா தோற்கடித்தது

கடந்த வியாழக்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் மட்டுப் படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகளைத் தோற்கடித்தது.

முடிவுற்ற ஒருநாள் போட்டித் தொடரில், ஒரே ஒரு ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியும், மிகுதி நான்கு ஆட்டங்களிலும் அவுஸ்திரேலிய அணியும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய த்தீவுகள் அணி 251 ஓட்டங்களை மாத்திரமே பெற்று ஆட்டம் இழந்தது. அவுஸ்திரேலிய அணி தனது துடுப்பாட்டத்தில், 48 3 ஓவர்களில் 6 விக்கட்டுகள் இழந்து, வெற்றி இலக்கான 252 ஓட்டங்களை இலகுவாகப்பெற்று வெற்றி வாகை சூடியது.

இப்போட்டியில், அவுஸ்திரேலிய அணி வீரர் மார்ஷ் 158 பந்து வீச்சுக்களை சந்தித்து 106 ஓட்டங்களை குவித்தமை சிறப்பு அம்சமாக அமைந்துள்ளது. (16)

## தபால் சேவை தொடர்ந்தும் பாதிப்பு

மாங்குளம் பகுதியில் இன்னமும் தபால் சேவை சீரடையாததால் கிராமப் புற மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகப் புகார் செய்யப்படுகின்றது.

மாங்குளம் தபாலகத்திற்கு யூன் மாதம் முதல் இற்றைவரையில் கொழும்புத் தபால் பொதிகள் இருதடைவகளே வந்துள்ளன

இப்பகுதியில் தபால் சேவை சீரடையாததால் பின்தங்கிய

## முல்லையில் ஊரடங்கு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று நண்பகல் முதல் காலவரையறையற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி அறிவித்தது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்கு நேற்று நண்பகல் முதல் நீக்கப்பட்டுள்ளது

## ரஞ்சனின் இடத்திற்கு வருகிறார் ரணில்

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவராகச் சபை முதல்வரும், கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பதவியை முன்னர் காலஞ்சென்ற அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவே வகித்து வந்தார்.

அவர் மரணமடைந்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே அமைச்சர் ரணில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தெல்லிப்பழையில் பயிலுநர் கூட்டம்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி அருணோதயாக்கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## முத்தமிழ் வித்தகர் நூற்றாண்டு விழா

முத்தமிழ் வித்தகர், முன்னாள் தமிழ்ப்பேராசிரியர் யாழ் நால் தந்த சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா நல்லை ஆதீனத்தில் 26ஆம் திகதி செவ்வாய் மாலை 3மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது

## அன்னை பூபதி ஞாபகார்த்த

### பொது அறிவுப் போட்டிக்கான விண்ணப்பம்

1. பெயர்:-
2. முழுப்பெயர்:-
3. பாடசாலை:-
4. பிறந்த திகதி:-
5. கல்வி கற்கும் வகுப்பு:-

முள்ளது.

ஏற்கனவே 120 ஊழியர்களுக்கு ஓய்வு பெறுவதற்கான அங்கீகாரக்கடிதங்கள் கடந்த ஜனவரியில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (13)

மொழித்தேவன் பிரதம நடுவராகக் கடமை ஆற்றினார். போட்டியில் பங்கு கொண்ட மாணவர்க்கு ஆலய பரிபாலகர் கு. நகுலேஸ்வரன் பரிசுகளை வழங்கினார்.


மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவை அழுக்கு நீக்கி

MILK WHITE LIQUID SOAP

All Purpose Dirt Remover

சாதாரண வீட்டுச் சலவைக்குப் பாவிக்கும்முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்துநிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கேற்ப பொலிவிற்கும் ஏற்ப அளவில் மாற்றஞ் செய்யவும்.

சகல ப.நோ.கூ. சங்கங்களிலும், கடைகளிலும் மில்க்வைற் விற்பனையாகிறது.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

03101


## விவரங்கள் தேவை

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150 வது ஆண்டு மலருக்கு 1947 ஆம் ஆண்டிற்கு முந்திய கல்லூரியின் (மாணவர் தலைவர் விளையாட்டுக் குழு விவரம், இல்லத் தலைவர்கள் போன்ற) விவரங்கள் தேவைப்படுவதால் இது பற்றிய தகவல்களைத் தந்துதவக்கூடியவர்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திற்குத் தந்துதவுமாறு பழைய மாணவர் சங்க இணைச் செயலாளர்களான கே. வி. செல்வராஜனும், டீ. ஆர். அருமைநாயகமும் கேட்டுள்ளனர். (15)


## சிறு விளம்பரம்

சேவை

புளொக் (Block) புகைப்படம், றபர் சீல், கலர் படம்- ஓவியம், பிறேம் போடுதல், கலர் பிலிம் சுருள்கள், கிரிக்கேல் முதலியவற்றிற்கு நாடுங்கள். கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்

03105


இப்பகுதியில் தபால் சேவை சீரடையாததால் பின்தங்கிய கிராமப்புற மக்கள் உடனடி நியமனங்கள், தேர்முகப் பரீட்சைகள், வெளிநாட்டுச் சந்தர்ப்பங்கள் போன்றவற்றை இழக்க நேரிடுவதாக அப்பகுதி மக்கள் கவலையடைகின்றனர். (38)

## பாரதிதாசன் நூற்றாண்டுவிழா

யாழ் பல்கலைக் கழகத் தமிழ்மன்றம் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை இன்று கைலாசபதி அரங்கில் கொண்டாடுகிறது. காலை ஒன்பது மணிக்கு மங்கல இசையுடன் ஆரம்பமாகும் விழாவில் பாரதிதாசனின் கவித்துவமும், கருத்து நிலையும் என்னும் பொருள் பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆய்வுரை நிகழ்த்துவார்.

பிற்பகல் நிகழ்ச்சியில் கவியரங்கமும், பாரதிதாசனின் பாடல்களில் மேலோங்கி நிற்பது மொழியுணர்வே? சமுதாய உணர்வே! என்ற தலைப்பிலான இ. ஜெயராஜ் நடுவராக இயக்கும் பட்டி மண்டபமும் இடம்பெறவுள்ளன.

5. கல்வி கற்கும் வகுப்பு:-

6. வதிவிட முகவரி:-

7. பிரிவு:-

கட்டணம்: ரூபா 3/-

..............................................

அதிபர்/பொறுப்பாசிரியர் ஒப்பம்

05. 04. 1991 அன்று 15வயதிற்கு உட்பட்டவர்கள் கீழ்ப்பிரிவாகவும், அதற்கு மேற்பட்டவர்கள் மேற்பிரிவு எனவும் பத்திரத்தை பூர்த்தி செய்க.

விண்ணப்பித்த சகல மாணவர்களுக்கும் கோத்தணி மட்டத்தில் ஒரு பரீட்சை நிலையத்தில் 12. 04. 91. அன்று பரீட்சை நடைபெறும்.

19. 04. 91 அன்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் இறுதிப் பொதுக் கூட்டத்தில் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அதி கூடிய பரிசில்களைப் பெறும் பாடசாலைக்கும், அதி கூடிய எண்ணிக்கையான மாணவர் பங்கு கொண்ட பாடசாலைக்கும் பரிசு வழங்கப்படும்.

★ விண்ணப்ப முடிவு திகதி:- 05 - 04 - 1991

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்.

(உங்கள் பிரிவு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க அலுவலகங்களில் ஒப்படைக்கவும்).

# உயிரினங்களை முற்றாக அழிக்கக்கூடிய விண் எரிமீன்

# பூமியை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கிறது

உலகையே தாக்கி அழிக்கக் கூடிய '1990 எம்.யூ' என்றழைக்கப்படும் எரிமீன் ஒன்று நாற்பதாயிரம் மைல் வேகத்தில் பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

**பிரத்தியேக செய்தி**

உலகுடன் அது மோதும் விளைவால் உயிரினங்கள் பூண்டோடு அழிந்துவிடும் என நாசா விண்வெளி நிலைய அதிகாரிகள், விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இந்த எரிமீன் நாளொன்றுக்குப் பத்து லட்சம் மைல்களைக் கடந்து வந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞானிகளின் கணிப்பின்படி இவ் வருட இறுதியில் '1990 எம் யூ' பூமியுடன் மோதும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகம் எதிர் நோக்கும் மிகப் பயங்கரமான ஆபத்தாக இந்த எரிமீன் கணிக்கப்படுகின்றது.

பூமியுடன் எரிமீன் மோதும் போது சோவியத்திலும், அமெரிக்காவிலும் உள்ள அனைத்து அணுவாயுதங்களையும் ஒரே நேரத்தில் வெடிக்கச் செய்தால் என்ன விளைவு ஏற்படுமோ அதைவிட மோசமான விளைவேற்படுமாம்.

எரிமீன் பூமியுடன் மோதும் போது உலகின் மேற்பரப்பின் உஷ்ணம் 38 ஆயிரம் டிகிரி செல்சியஸாக அதிகரிக்கும். சூரியனின் மேற்பரப்பில் உஷ்ணம் 7000 டிகிரி மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த எரிமீனை அவுஸ்திரேலியாவில் உள்ள சிடிங்ஸ்பிரிங்கில் உள்ள ஆய்வு மையத்தைச் சேர்ந்த நிபுணர்கள் முதலில் கண்டுபிடித்தார்கள்.

'1990 எம் யூ' எரிமீன் ஏற்படுத்தும் விளைவுகளைத் தவிர்க்க நாசா விஞ்ஞானிகள் பல வழிமுறைகளைக் கண்டு பிடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தொலைவிலிருந்து இயங்கக் கூடிய ஏவுகணைகளைப் பாய்ச்சி எரிமீனை வழிமறிப்பது அவர்கள் வழங்கியுள்ள ஆலோசனைகளில் ஒன்று.

## அஞ்சலிக் கூட்டம்

முன்னாள் கூட்டுறவு ஆணையாளரும், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவருமான அமரர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் மறைவை ஒட்டிய அஞ்சலிக் கூட்டம் யாழ் மாவட்ட சி. க. வ. கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வலிகாமம் கிழக்குப் பிராந்திய சபையினரால் நடாத்தப்பட்டது.

இச் சபையின் தலைவி திருமதி ஆர். ஆனந்தவேல் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் இயல், இசை, நாடகப் போட்டிகளும் இடம் பெற்றன.

அமரர் ஞானப்பிரகாசர் ஞாபகார்த்தக் கேடயத்தை நீர்வேலி வடக்கு ஐக்கிய நாணய சங்கம் பெற்றுக் கொண்டது. (66)

## விவசாயிகளுக்கு கமநலசேவை உதவி

உடுவில் பிரதேச கமநல சேவை நிலையத்தின் எல்லைக்குள் அடங்கும் காணி உரிமையாளர்கள் தமது நிலப்பரப்பினைத் தரிசாக விடவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி அறிவித்தலை விடுத்துள்ள பெரும்பாக உத்தியோகத்தர் தே. மகாதேவராஜா தமது கமநலசேவை நிலையத்தின் ஊடாக பயறு, கௌபி, எள்ளு, வெண்டி, சணல் முதலிய சிறு தானிய உற்பத்திக்கான விதைப் பொருள்கள் இப் பகுதி விவசாயிகளின் தேவைக்கேற்ப விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட கமநல சேவை நிலையங்களின் சேவையின்கீழ் குறைந்த வாடகையில் விவசாய இரும்பு நாசினி தெளிப்பான் கருவிகளும், மற்றும் இரசாயனப் பொருள்களும் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (34)

## யோக சுவாமிகள் குருபூஜை

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய இந்து மாணவ மன்றத்தின் ஆதரவில் எதிர்வரும் 26 ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் தவயோகி யோக சுவாமிகள் குருபூசை நடைபெறவுள்ளது.

அதிபர் திரு கா. கணேசதாசன் தலைமையில் பல சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## அவசர காலச்சட்டம் மேலும் நீடிப்பு

## பாலைவனம் தான் என்றாலும் பசுமைச் சோலைவனமும் அங்குண்டு

சவூதி அரேபியா ஓர் பெரும் பாலைவனம் என்றும் அங்கு பாலைவனங்களும் ஒருசில பாலைவனச் சோலைகளுமே உள்ளன என்றும் பலரும் இன்றுவரை கருதுகின்றனர்.

இது முற்றிலும் தவறான தொரு அபிப்பிராயம். பாலைவனங்களை கூடுதலாகக் கொண்ட பிரதேசமானாலும் கூட பெரும் காடுகளையும், பெருஞ்செடி கொடி மரங்களையும் புற்புதர்களையும் பரட்டைக் காடுகளையும் கூட சவூதி அரேபியா கொண்டிருக்கிறது.

பச்சைப்புல் பூண்டு செடி கொடிமரங்களாம் தாவரங்களோடு பல்வகை மிருகங்கள் பறவைகளையும் கொண்டு விளங்குகிறது சவூதி.

ஐரோப்பிய தேசத்தை ஒப்பிடக்கூடிய வகையில் இப் பசுமை நிறைந்த இடங்கள் காட்சியளிக்கின்றன.

## பேராசிரியர் கைலாசபதியின் 4 நூல்கள் சென்னையில் மறுபிரசுரம்

மறைந்த பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதியினால் எழுதப்பட்ட இலக்கிய நூல்கள் சில சென்னை 'புக்ஸ்' நிறுவனத்தினரால் மறுபிரசுரம் செய்யப்படவுள்ளன.

1980 இல் வெளியிடப்பட்ட 'ஒப்பியல் இலக்கியம்.' 1970 இல் வெளியான 'கவிதை நயம்' மற்றும் 'இலக்கிய மும் திறனாய்வும்,' 1980 இல் வெளிவந்த 'திறனாய்வு பிரச்சினைகள்' ஆகியநான்கு நூல்களுமே மறுபிரசுரம் செய்யப்பட்டு வருகின்றன.

## இந்திய இராணுவம் வெளியேறி இன்றுடன் ஒருவருடம் பூர்த்தி

இந்திய இராணுவம்வடக்கு கிழக்குப் பகுதிகளை விட்டு வெளியேறி இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது.

கடந்த 1990 டிசம்பர் மாதத்தில் இலங்கையிலிருந்து இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்பும் பணி ஆரம்பமாகியிருந்தது.

முதலில் மட்டக்களப்பிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறியிருந்தது.

அதன்பின்னர் 1990 பெப்ரவரி 29 ஆம் திகதி யாழ் நகரிலிருந்து இந்திய இராணுவம் வெளியேற ஆரம்பித்திருந்தது.

1990 மார்ச் 24 ஆம் திகதி இந்திய இராணுவத்தின் கடைசி அணி திருமலையிலிருந்து முற்றாக வெளியேறியது. (70)

## நோயாளருக்கு உணவு இல்லை

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் இம்மாதம் தொடக்கம் நோயாளர்கள் ஊழியர்கள் ஆகியோருக்கான உணவு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. (13,20)

## தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்கப்போவதாக டக்ளஸ் அறிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளிக்கப்போவதாக ஈ. பி. டி. பி. அறிவித்துள்ளது.

ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா இதனை அறிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## சுவிஸிலும் வேலையில்லை

சுவிஸ் நாட்டில் அகதிகளாகத் தஞ்சமடைந்த பல இலங்கையர் இன்னமும் வேலையேதுமின்றி இருப்பதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக எதுவித வேலையுமின்றி அகதிமுகாம்களில் கிடைக்கும் நிவாரணப் பணத்தைக் கொண்டே இவர்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனராம்.

## கல்வி நிருவாகசேவை போட்டிப் பரீட்சை ஏப்.10 ஆம் திகதிவரை விண்ணப்பிக்கலாம்

இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் மூன்றிற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய இறுதித் திகதி ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகக் கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முன்னர் இதற்கான இறுதித் திகதி மார்ச் மாதம் 23 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

இப் போட்டிப் பரீட்சைக்கு

பரீட்சை அடுத்த மாதம் 27 ஆம் திகதி கொழும்பில் நடாத்தப்படவுள்ளதாக அறியப்படுகின்றது (34)

## சகலபாடசாலைகளிலும் ஆண்டு 5-ல் மும்மொழிபரீட்சை

## முதலாவது பரீட்சை ஆகஸ்ட்மாதம் நடைபெறும்

இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் ஆண்டு ஐந்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மூன்று மொழிகளிலும் எழுத்துத்தேர்வு ஒன்றை நடாத்துவதற்குக் கல்வி உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை ஆணையாளரினால் இப்பரீட்சை ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதத்தில் நடாத்தப்படும். 1991 இல் இப்பரீட்சை விருப்பத்திற்குரியதாக இருந்தாலும் அதன் பின்னர் கட்டாயமானதாக இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தாங்கள் விரும்பியவாறு பரீட்சைக்குத் தவார் செய்து பாடசாலைகள் மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். எல்லாப் பாடசாலைகளுக்கும் கற்றல் உப

மொத்தம் 120 புள்ளிகளைக் கொண்டதாகவும் அமையும் ஒவ்வொரு பகுதியிலும் குறைந்தது 30 புள்ளிகளைப் பெற்று மொத்தத்தில் 60 புள்ளிகளையோ அல்லது அதற்கு கூடுதலான புள்ளிகளையோ பெறும்பரீட்சார்த்திக்கு இப்பரீட்சையில் சித்தி பெற்றதற்கு சான்றாக பரீட்சை ஆணையாளரினாற் சான்றிதழ் வழங்கப்படும்.

பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களாலோ அல்லது வெளியிலிருந்து எடுக்கப்படும் ஆசிரியர்களாலோ மாணவர்களை பயிற்றுவிக்க பாடசாலை அதி

## கிரிக்கெற் போட்டிபார்க்கச் சென்ற றோயல் மாணவர்தலைவர் மர்ம மரணம்

றோயல் கல்லூரி மாணவர் தலைவன் கீர்த்தி அபய சேகர நீடிரேன மர்மமான முறையில் மரணமானது கொழும்பில் மாணவர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்

பெற்றோருக்குக் கூறிச் சென்றார். இரவில் அவரது உயிரற்ற உடல் வீட்டிற்கு வந்தது

நெற்றியிலும், நாடியிலும், காயங்கள் ஏற்பட்டு மரணமான அவரது மரண விசார

## மேலும் நீடிப்பு

அவசரகாலச்சட்டம் மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்டபோது ஆதரவாக 118 பேரும், எதிராக 56 பேரும் வாக்களித்தனர்.

## சதாவதானி குருபூசை

புலோலி மேற்கு சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை குருபூசைத் தினத்தை முன்னிட்டு இம்மாதம் 25ஆம் திகதி பௌர்ணமிவிழா நடைபெறவுள்ளது. இவ் விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (38)

## அல்வாய் வேவிலந்தை அம்பாள் உற்சவம்

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகா பிஷேகமும் இளைஞர் விழாவும் இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளன. கும்பாபிஷேகத்தையொட்டி அன்னதானமும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (38)

...றது.

இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான விவரங்கள் அடங்கிய வர்த்தமானிப் பத்திரிகையின் பிரதியை யாழ் கல்வித் திணைக்களத்தில் விண்ணப்பதாரிகள் பார்வையிட முடியும்.

தரம் மூன்றிற்குப் பதவி உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்

கொழும்பில் மாணவர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

றோயல் கல்லூரிக்கும் சென்ற் தோமஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற வருடாந்த கிரிக்கெற் போட்டியைப் பார்க்க நண்பர்களுடன் போன இவர் "இரவுக்கு முன் வந்து விடுவேன்" எனப்

...சங்கள் ஏற்பட்டு மரணமான அவரது மரண விசாரணையின் போது சக மாணவர் சாட்சியமளிக்கையில் "நாங்கள் கிரிக்கெட் பந்தயத்தை யொட்டி மிகுந்த உற்சாகத்துடன் இருந்தோம். நூறு மாணவர்களுடன் ஜீப்பில் பவனி வந்தோம். பின்பு உற்சாகமிகுதியால் எல்லோரும் மது அருந்தினோம்" என்றார்.

இறந்தவரின் தகப்பன் தன் மகன் மது அருந்துவதில்லையெனப் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

## வளைகுடா யுத்தத்தின் பின்னணி; கறுப்பர் மத்தியில் கலக்கம்

வளைகுடா யுத்தத்தில் பங்கு பற்றுவதற்கென அமெரிக்க துருப்புகள் தெரிவு செய்யப்பட்ட விதம், அங்குள்ள கறுப்பர்கள் மத்தியில் தற்போது பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது.

அமெரிக்காவில் கறுப்பர்கள் சனத்தொகையில் பதினேழு சதவீதமாக உள்ளனர். ஆனால் வளைகுடா யுத்தத்திற்கென அனுப்பப்பட்ட அமெரிக்க துருப்புக்களில் நாற்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் அமெரிக்க கறுப்பர்களாவர்.

இவ்வாறு செய்ததன் மூலம் அமெரிக்க ஜனாதிபதி புஷ் போர்க்களத்தில் வெள்ளையர்களின் மரண எண்ணிக்கையைக் குறைக்க முனைந்துள்ளதுடன், கறுப்பர்களின் சனத்தொகையும் குறைக்க மறைமுகத் திட்டம் வகுத்து குள்ளத்தனமாகச் செயற்பட்டதாக அமெரிக்க கறுப்பினத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர். (16)

## க.பொ.த.பரீட்சை முடிவுகள் தயார்

கடந்த டிசம்பர் மாதம் வடக்கு கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் முடிவுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

அழகியற்கல்வி செய்முறைப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் இரண்டாம் தவணை விடுமுறைக்கு முன்னர் பரீட்சை முடிவுகள் அனைத்தும் வெளியிடப்படும் எனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சாலைகளுக்கும் கற்றல் உபகரணமாக மும்மொழி அரிச்சுவடிகள் வழங்கப்படும்.

வினாத்தாள் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியதாகவும்

பயிற்றுவிக்க பாடசாலை அதிபர்கள் முயற்சி எடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (78)

## ஊனமுற்றோர் சர்வதேச திரைப்பட விழா; திரையிட 'அஞ்சலி' தெரிவானது

உடல் ஊனமுற்றோர் பற்றிய சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்படுவதற்கு 'அஞ்சலி' என்ற தமிழ்த் திரைப்படம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றிய குழந்தையொன்றின் கதையை மையமாக வைத்து இப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர் பற்றிய சர்வதேச திரைப்பட விழா அடுத்த மாதம் 8-ம் திகதி முதல் 11-ம் திகதிவரை டில்லியில் நடைபெறவுள்ளது.

## முன்னிலையில்

கோட்ட மட்ட தமிழ்த் தினப் போட்டியில் காங்கேசன் நடேஸ்வராக் கல்லூரி 5 போட்டிகளில் முதலாம் இடத்தினை பெற்றது. (ப-10

## பஞ்சாப்பில் 30 பஸ் பயணிகள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை!

பஞ்சாப்பில் பஸ் ஒன்றில் பயணம் செய்த 30 பயணிகள் இனந் தெரியாத துப்பாக்கிக்கோஷ்டி யொன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சண்டிகாருக்கு வடக்கே 25 கிலோமீற்றர் தூரத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது.

கொலைப் பட்டவர்களில் இந்துக்களும், சீக்கியர்களும் உள்ளடங்குவதாகவும் இவர்கள் ஆலை ஒன்றில் பணி புரிபவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

★ ஆஞ்சநேயர் ஆசிரியர்களுக்கு வேண்டுகோள்

# பாட நூலில் உள்ள வரலாற்றுத்தவறை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்!

மக்கள் ஒரே கோட்டிலேயே இணைந்தால் தான்சுதந்திரம் நிச்சயமாக கிடைக்கும் இன்று ஈழத்தமிழன் வரலாற்றில் அடையாத ஒரு வெற்றியை ஈட்டி வருகிறான்.

இவ்வாறு யாழ் மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தெரிவித்தார்.

யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியில் நேற்று நடைபெற்ற சாம்சனின் நினைவுக்கூட்டத்தில் பேசிய அவர் "முன்னைய சமுதாயத்துக்குக் கல்வி மறுக்கப்பட்டது மண் பறிக்கப்பட்டது. ஆனால் இன்று எதிரிகளிடமிருந்து துப்பாக்கி பறிக்கப்படுகிறது. எதிரியின் மூளை நோக்கி எமது துப்பாக்கிச் சன்னங்கள் சன்னதை போடுகிறது.

சிங்கள இனவாத அரசால் 6-ஆம் ஆண்டு மாணவர்களிடையே புகுத்தப்பட்ட பாடநூல் எமது மாணவ சமுதாயம் மீது வரலாற்றில் நடக்காத ஒரு பொய்யைத்திணித்துள்ளது:

இதனை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உண்மையை எடுத்துக் காட்டிப் படிப்பியுங்கள் ஆனால் பரீட்சைக்கு பொய்யையே எழுதுங்கள் என்றும்அவர் கூறினார். (74)

காங்கேசன் சிமெந்து

## சிற்றுண்டிச்சாலை ஊழியர் சம்பளம் வழங்கப்படவில்லை

லங்கா சிமெந்து லிமிட்டெட் சிற்றுண்டிச்சாலை சமயாசமய ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு கொழும்பு தலைமையகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு வழங்கிய சம்பளப் பணத்தை நிர்வாகிகளிடமிருந்து தலைமையகம் அறவிட்டுவிட்டது.

தற்போது நிர்வாகத்தினர் ஏனைய ஊழியர்களின் சம்பளப் பணத்தில் இதனை கழிப்பதற்கு அவர்களின் சம்மதத்தைக் கோரியுள்ளனர்.

இதற்குப் பெரும்பாலான ஊழியர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். (48)

மேல் நீதிமன்றம் தடையுத்தரவு

## கொழும்பு மாநகரசபை தலையிடக்கூடாது

கொழும்பு மாநகரசபை செட்டியார் தெருவில் உள்ள நகைக்கடையின் வர்த்தக நடவடிக்கையில் தலையிடோ அல்லது உடைமை கொள்வதோ தடுக்கப்பட்டுள்ளது என்று மேல்முறையீட்டு நீதியரசர்களான டி. பாலகிட்ணர் எச் டபிள்யூ. சேனநாயக்கா ஆகியோர் தடை உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

கொழும்புமேயர் ஹூசைன் மூகம்மது உட்பட மூவர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்

நகைக்கடை மாநகரசபைக்குச் சொந்தமானதாகும் 1980 இல் இருந்து மனுதாரரே அதில் வியாபாரம் செய்கிறார். கடை வாடகைக்கு எடுக்கப்பட்டது. எனவே மனுதாரரே கடையின் சட்டபூர்வ உரிமையாளராவர் என்று மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறுவதால், இதில் பிரதிவாதிகள் தலையிடக்கூடாது எனக் கூறி இடைக்கால தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (38)

## கிழக்குஅகதிமுகாம்களிலும் மலேரியா பரவுகிறது

தெற்கின் பல பகுதிகளில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவிவருவதாக சுகாதாரப் பகுதி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

கிழக்கு மாகாணத்தில் உள்ள அகதிகள் முகாம்களிலும் இந்த நோய் வேகுவாகப் பரவிவருவதாகவும் கூறப்படுகிறது. (71)

## கப்பலில் செல்லும் நோயாளிகள் பதிவு செய்யுமாறு கோரிக்கை

கப்பல் மூலம் கொழும்பு செல்லவிருக்கும் கடுமையான நோயாளர்களை யாழ் போதனா வைத்திய சாலையில் பதிவு செய்து கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகலிலும் வெள்ளிக்கிழமை காலையிலும் இவர்களுக்கான பதிவு வேலைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (70)

## பரீட்சைகளில் மாற்றம் கல்வியமைச்சு நடவடிக்கை

நாட்டிலுள்ள பாடசாலை பரீட்சைகளிலும் அரசாங்கம் நடாத்தும் பரீட்சைகளிலும் சில மாற்றங்களைக் கொண்டுவர கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

மாணவர்கள் பார்த்து எழுதுதல் ஆள் மாறாட்டம் போன்றவற்றைத் தடுப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில வெளிநாடுகளில் இடம்பெறும் பரீட்சைகளைப்போல இவற்றை நடாத்த விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## நகைக்கடையில் கொள்ளை மாஜி சிப்பாய் கைது

கொழும்பில் ஜனாதிபதி மாவத்தையில் உள்ள நகைக் கடை ஒன்றில் இருந்து ஒன்றரை லட்சம் ரூபாவை ஆயுத முனையில் கொள்ளையடித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் அண்மையில் இராணுவத்திலிருந்து வெளியேறிய கல்முனையைச் சேர்ந்த மீரா மொஹிதீன் ஆப்தீன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொள்ளையரை மோட்டார் சைக்கிளில் துரத்திய அதிகாரி, இவர்களை பழைய பாராளுமன்றக் கட்டடத்திற்கு அருகில் வைத்துப் பிடித்தார்.

கொள்ளையரிடம் இரு கைக் குண்டுகளும் இருந்தனவாம்.

## ஊரியான் நோக்கி இராணுவம் ஷெல் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை ஷெல் தாக்குதல் பரவலாக இடம் பெற்றது

இந்த ஷெல் ஊரியான் பகுதியில் விழுந்து வெடித்ததால் எல் சிவராசா 21 (ஊரியான்) உட்பட மேலும் இருவர் காயமடைந்தனர் (74)

கொழும்பு...

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் அமுலிலிருந்த

யாழ்—

வேண்டிய நிலை உருவாகும் என்றும். அவ்வாறு பல்கலைக்கழகம் மூடப்பட்டால் அதற்கான உண்மையான

பாரதரத்தினா...

வழங்கப்பட்டன.

## ஹெலியில் வந்த ஆலைத் தலைவர்

# சிறிய செய்திகள்

## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

யாழ் மாவட்டத்திலுள்ள பாலர் பாடசாலைச் சேவையினை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக எதிர்வரும் 31-ம் திகதி காலை 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் (ஆண்கள்) கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமாக உள்ளூராட்சி மன்றம், சனசமூக நிலையம், தனியார், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றினால் நடாத்தப்படுகின்ற பாலர் பாடசாலைகளுக்கு இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார், (33)

## உரும்பிராயில் மாலை ஹெலித் தாக்குதல்

நேற்றுமாலை 5-30 மணியளவில் உரும்பிராய் பகுதியில் ஹெலிக்கப்டர் நடாத்திய தாக்குதலில் இ. சத்தியலிங்கம் (32) வண்ணார் பண்ணை காயமடைந்தார். (70)

## உடற்கல்வி கருத்தரங்கு

ஆண்டு 6க்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கு உடற்கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கான கருத்தரங்கு யாழ் கல்வித் திணைக்களத்தினால் காலை 8 30 தொடக்கம் மாலை 5மணிவரை நடாத்தப்படவுள்ளது

நாளை 25ஆம் திகதி திங்கள் யாழ்ப்பாணக் கோட்டம்-கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், 28ஆம் திகதி சாவகச்சேரிக் கோட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

உடற்பயிற்சிக்குரிய உடைகளோடு கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (71)

## வலிவடக்கு மாணவருக்கு கொப்பிகள்

வலிவடக்கு பாடசாலைகளின் மாணவர்கள் தமது உணவு முத்திரைக்கு தேவையான பயிற்சிக் கொப்பிகளை பெற்றுக் கொள்ள தெல்லிப்பளை பல நோ. கூ. சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது (32)

## தபாலகத்தில் வைப்புச்சான்றிதழ் நடவடிக்கை

அஞ்சல் அலுவலகங்களில் நடைமுறையில் இருக்கும் தேசியசேமிப்பு வங்கிக்குரிய நிலையான வைப்புச் சான்றிதழ் புதுப்பித்தல், தற்போது யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகத்தில் நடைபெறுகிறது. (33)

## வவுனியா - யாழ் சைக்கிள் வாடகை

வவுனியாவிலிருந்து யாழ் வருவதற்கு முச்சக்கரவண்டிக்கு கட்டணமாக 5000ரூபா அறவிடப்படுகிறது அண்மையில் கொழும்பிலிருந்து வந்த சிலர் 5000ரூபா கொடுத்து முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்தி யாழ் வந்தனர். (48)

## அம்பாறை மாவட்ட மக்களுக்கு அடகு நகை மீட்க நிவாரணம்

மக்கள் வங்கி கிளைகளில் அடகு வைத்த அம்பாறை மாவட்ட மக்களுக்கு 1984 ஆம் ஆண்டு முதல் வட்டியை ரத்து செய்து நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 1984 முதல் வட்டி அறவிடப்பட்டுள்ளது என சம்பந்தப்பட்டவர்களுக்கு புகார்கள் தெரிவிக்கப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. (38)

## பருத்தித்துறை துறைமுகத்துக்கு அமெரிக்கா நிதி உதவி

பருத்தித்துறை துறைமுக 12 லட்சம் ரூபா வரை

கொழும்பு...

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் அமுலிலிருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப் பட்டதை அடுத்தே பெருமள வான மக்கள் யாழ்ப்பாணம் வருவார்கள் என எதிர்பார்க் கப்படுகிறது. (70)

மூடப்படாத...

ரஞ்சனுக்கே சில தோட் டங்கள் விடுமுறை அனுசரிக் காதது இந்த அமைச்சுக்கு அதிருப்தியை அளித்துள்ள தாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

அரசு விடுத்த அறிவிப்புக்கு அமைய சில நிறுவனங்களின் கதவுகளை மூடிவிட்டு உள்ளே வேலைகள் நடைபெற்றதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

சில தனியார் நிறுவனங் கள் அன்றைய தினம் மூடி இருந்தால் பெரும் நஷ்டம் ஏற்படுமென்று இவ்வாறு செய்ததாகக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. (33)

என்றும். அவ்வாறு பல்க லைக்கழகம் மூடப்பட்டால் அதற்கான உண்மையான காரணம் வெளிக் கொணரப் படும் எனவும் நாட்டு நிலை மையை காரணமாகக் கூறு வதற்கு எவ்வித சந்தர்ப்ப மும் இல்லை எனவும் அதி காரிகளுக்கு எடுத்துக் கூறப் பட்டதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

இவ்வாறு கொடுத்த நெருக் குதலை அடுத்தே பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அத்தியாவசிய பொருள்களை வழங்குவதற்கு இணங்கியதா கக் கூறப்படுகிறது.

யாழ் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவது பல் கலைக்கழக மானிய ஆணைக் குழு வட்டாரங்களில் வெறுப் பையும், வயிற்றெரிச்சலையும் மூட்டியுள்ளதாகவும் இத னால் இதனை மூடிவிடுவது பற்றி இரகசியமாக ஆராயப் பட்டதாகவும் கடந்த மாதம் 17 ஆம் திகதிய முரசொலி செய்தி வெளியிட்டது வாச கர் அறிந்ததே. (70)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட் டெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி' பில்டிங்ஸ்'இல் உள்ள அச்சகத்தில் 24-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பாரதரத்தினா...

வழங்கப்பட்டன.

இதேவேளை இந்தியாவின் உயர் விருதான பாரத் ரத்னா விருதுக்கு அறிவிக் கப்பட்ட முன்னாள் பிரத மர் மொராஜி தேசாய் நேற் றைய விருது வழங்கும் நிகழ்ச் சியில் கலந்து கொள்ள வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

கப்பல்...

இருந்து திரும்பிய பின்னர் தாம் அரசாங்க அலுவல்கள் நிமித்தமே கொழும்புக்கு சென்றதாகக் கூறி அதற்குரிய விசேட படிவங்களையும் பெற் றுக் கொள்கின்றனர்.

இதேநேரம் பல திணைக் களங்களின் உயர் அதிகாரி கள் கப்பல் மூலம் கொழும்பு செல்ல அனுமதி கோரியும் ஒரு சிலருக்கே அது கிடைப் பதாகவும் தெரிவிக்கப்படுகி றது. (ப11)

உள்ளூராட்சி...

டியிட முடிவு செய்ததும் குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக்கட்சியும்: இ. தொ. காங்கிரஸும் சேர்ந்து போட்டியிடத் தீர் மானித்துள்ளன. (38)

# ஹெலியில் வந்த ஆலைத் தலைவர்

காங்கேசன் சிமெந்து ஆலையை அதன் தலைவர் கொழும்பிலிருந்து ஹெலி கப்டரில் வந்து பார்வையிட் டுச் சென்றதாகத் தெரியவரு கிறது (48)

தென்...

இத்துடன் 5 ஆண்களை கைது செய்து பெரிய போறைதீவு முகாம் கொண்டு சென்று அடுத்தநாள் காலைவிடுதலை செய்தனர்.

கடந்த புதனன்று திருமலை யிலுள்ள நிலாவெளி பீச் ஹோட்டலில் வேலைசெய்து கொண்டிருந்த 5 ஆண்களை கைதுசெய்து முகாம்கொண்டு சென்றனர் இவர்களுக்கு என்ன நடந்தது என்ற விவரம் தெரியவில்லை. (71)

செஞ்சிலுவைச்...

பெரும் தேர்தலில் இருந்து விலகிக் கொள்வார்கள் என நம்பிக்கையான வட்டாரங் களில் இருந்துதெரியவருகிறது.

ஆயுதங்களை...

கைவிட்டே வரவேண்டும் என்றார்.

# அமெரிக்கா நிதி உதவி

பருத்தித்துறை துறைமுக இரண்டாம் கட்ட திருத்த வேலைகளுக்கு அமெரிக்க அர சின் உதவித்திட்டத்தில் கீழ் நிதி கிடைக்கவுள்ளது.

நான்கு லட்சம் ரூபா செல வில் முதலாம் கட்டமாக 60 அடி வேலைகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளன.

இத்துறைமுகத்தை மேலும் 60 அடி வரை விஸ்தரிக்க 12 லட்சம் ரூபாவரை தேவைப்படுமென மதிப்பீடு களில் இருந்து அறியவருகி றது.

இரண்டாம் கட்டவேலை கள் பூர்த்தியடைந்தால் ஒரே சமயத்தில் இரண்டு கப்பல் களிலிருந்து பொருள்களை ஏற்றி இறக்க வசதியாகவிருக் கும் எனவும் தெரிவிக்கப்படு கிறது. 66

# நெல்லின் உத்தரவாத விலை அதிகரிக்கப்பட்டுள்ளது

நெல்லின் உத்தரவாத விலையை அதிகரித்துள்ள தாக நெல்சந்தைப்படுத்தும் சபை அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு புசல் நெல் லின் உத்தரவாத விலை 110 ரூபாவிலிருந்து 136 ரூபா வாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வேலையில்...

வேலைக்குச் சேர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் சில தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டு இங்கு புதிய நியமனங்கள் நடைபெறும் எனவும் சம்பந்தப்பட்ட அதி காரி தெரிவித்தார். (38)

மத்திய...

வதும் எனது கடமையாகும். இதை மத்திய வங்கி கவர்னர் அறிந்திராதது ஆச்சரியப்ப டத்தக்க விடயம்.'' எனவும் அவர் சொன்னார்.

தமிழ்..

வத்தை இராணுவ முகாமி லும், கொண்டவட்டுவான் முகாமிலும் கடுமையாகச் சோதனையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 38)